செ.வெ.எண்: 283 நாள்: 31.05.2021

**அரசு மருத்துவமனைகளில் பணிபுரிய கோவிட் - 19 மருத்துவப் பணிகளுக்கு குறுகிய காலப் பயிற்சி வழங்கப்பட உள்ளது.**

**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

---

அரசு மருத்துவமனைகளில் பணிபுரிய கோவிட் - 19 மருத்துவப் பணிகளுக்கு குறுகிய காலப் பயிற்சி வழங்கப்பட உள்ளது. இதுகுறித்து புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் மருத்துவத்துறை சார்ந்த பணிகளுக்கான இலவச குறுகிய கால பயிற்சி அளிக்கப்பட உள்ளது. பிரதமரின் கவுஷல் விகாஸ் யோஜனா எனும் பயிற்சித் திட்டத்தின் கீழ், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் மூலம் சுகாதாரத்துறையில் கொரோனா தொடர்பாக இலவச குறுகிய கால பயிற்சி ஒரு மாதம் வழங்கப்பட உள்ளது.

எமர்ஜென்சி மெடிக்கல் டெக்னீசியன், ஜெனரல் டூட்டி அசிஸ்டண்ட், ஜெனரல் டூட்டி அசிஸ்டண்ட் (தீவிர சிகிச்சைப் பிரிவு), ஹோம் ஹெல்த் எய்ட், மெடிக்கல் எக்யூப்மென்ட் டெக்னாலஜி அசிஸ்டண்ட், பிளேபோடோமிஸ்ட் ஆகிய பிரிவுகளில் பயிற்சிகள் அளிக்கப்பட உள்ளன.

இந்த பயிற்சிகளில் 10 மற்றும் 12 ஆம் வகுப்பு முதல் பட்டப்படிப்பு முடித்தவர்கள் வரை சேரலாம். பயிற்சி முடித்தவுடன் மாவட்ட அரசு மருத்துவமனை, ஆரம்ப சுகாதார நிலையம், தனியார் மருத்துவமனைகளில் தொழில் முறை பயிற்சியுடன் பணியில் சேரலாம்.

பயிற்களில் சேர விரும்புபவர்கள் தங்களது பெயர், கல்வித் தகுதி, பயிற்சியில் சேர விரும்பும் பிரிவு, தொலைபேசி எண், இ-மெயில் முகவரி ஆகியவற்றை adpdkt18@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரி அல்லது உதவி இயக்குநர், மாவட்ட திறன் பயிற்சி அலுவலகம், புதுக்கோட்டை என்ற முகவரியில் விண்ணப்பிக்கலாம்.

மேலும் விபரங்களுக்கு 94431 84841, 94879 77210 என்ற அலைபேசி எண்களில் தொடர்பு கொண்டு தெரிவிக்கலாம். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---------------------------------------------------------------------------------------------------

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**